## உலக பக்கவாத தினம் – 2014

## தலைப்பு "நான் ஒரு பெண்"

உலக பக்கவாத தினம் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் 29ஆம் தேதி பொதுமக்களுக்கு பக்கவாத காரணிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த கொண்டாடப்படுகிறது. இந்த தினம் உலக பக்கவாத சங்கத்தின் முன்முயற்சியாக தொடங்கப்பட்டது. இந்த தினத்திற்கு அமெரிக்க இருதய கூட்டமைப்பும், அமெரிக்க பக்கவாத கூட்டமைப்பும் ஆதரவளிக்கின்றது. ஒவ்வொரு வருடமும் ஒரு தலைப்பில் கொண்டாடப்படுகிறது. இந்த வருடத்தின தலைப்பு "நான் ஒரு பெண்".

பக்கவாதம் என்பது ஒரு உலக சுகாதார பிரச்சனை. இறப்பிற்க்கு பக்கவாதம் ஒரு பொதுவான காரணமாகும் மற்றும் இதுவே உலகத்தில் உள்ள உடல் குறைபாடுகளுக்கு நான்காவது முதன்மையான காரணமாகும். உலகம் முழுவதும் 15 லட்சம் மக்கள் பக்கவாதத்தால் பாதிக்கபடுகின்றனர். இந்த 15 லட்சம் மக்களில் 6 லட்சம் மக்கள் இறந்துவிடுகின்றனர். மீதமுள்ள 5 லட்சம் மக்கள் நிரந்தர குறைபாடுகளுடன் வாழ்கின்றனர்.

உலகளவில் ஒவ்வொரு 6 நொடிக்கும் ஒருவர் பக்கவாதத்தால் பாதிக்கப்படுகின்றார். ஒவ்வொரு வருடமும் பக்கவாதத்தால் ஏற்படும் இறப்புகள் எய்ட்ஸ், டீபி மற்றும் மலேரியாவால் ஏற்படும் இறப்புகளை விட அதிகமாக உள்ளது.

இந்தியாவில் வருடத்திற்க்கு 15,00,000 பேர் பக்கவாதத்தால் பாதிக்கப்படுகின்றனர். பக்கவாதத்தினால் 41 சதவீத மக்கள் இறப்பிற்க்கு ஆளாகின்றனர். இந்தியாவில் நகர்புறத்தில் ஒரு லட்சம் பேரில் 334 முதல் 424 நபர்கள் பக்கவாதத்தால் பாதிக்கப்படுகின்றனர். ஒரு வருடத்திற்கு நகர்புறங்களில் ஏற்படும் பக்கவாதத்தின் அளவு 145 / 100,000 ஆகும். இதில் பக்கவாதத்தால் பாதிக்கப்படும் 12 சதவீதம் பேர் 40 வயதிற்கு குறைவாக உள்ளவர்கள்.

ஏன் பெண்ணிற்கு மற்றும் பக்கவாதம்?

1) பக்கவாதத்தால் ஏற்படும் இறப்பு வீதம் ஆண்களைவிட பெண்களே அதிகம். பத்தில் ஆறு பெண்கள் பக்கவாதத்தால் இறக்கின்றனர்.
2) பெண்களுக்கு பக்கவாதம் ஏற்படும் காரணிகள் அதிகம். பக்கவாதத்தின் காரணிகளான நீரிழிவு நோய், ஊற்றறை உதறலில், மனஅழுத்தம் மற்றும் உயர் இரத்த அழுத்தம் அதிகமாக பெண்களுக்கு காணப்படுகின்றன மற்றும் பல பக்கவாதத்தின் காரணிகளான கர்ப்பகாலத்தில் ஏற்படும் நீரிழிவு நோய் ஹார்மோன் மாறுதல் ஆகியவை பெண்களுக்கே உரியவை. இந்த காரணத்தினால் ஐந்தில் ஒரு பெண் பக்கவாதத்தால் பாதிக்கப்படுகின்றன.
3) ஆண்ளை விட பெண்களுக்கு பக்கவாதத்தால் விளைவுகள் அதிகம்.
4) பெண்கள மற்றும் பக்கவாதத்தின் உட்பிரிவுகள்

   பக்கவாதத்தின் உட்பிரிவுகளான பெருமூளை நரம்பில் ஏற்படும் இரத்த உறைவு(Cerebral Vein Thrombosis) மூளையில் ஏற்படும் இரத்தக்கசிவு (subarachnoid haemorrhage) ஆகியவை பெண்களை அதிகம் பாதிக்கின்றது.

5) பக்கவாதத்தால் ஏற்படும் மனஅழுத்தம் ஆண்களை விட பெண்களையே அதிகம் பாதிக்கின்றது.
6) குடும்பத்தில் ஒருவர் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டால், அந்த குடும்பத்திலுள்ள பெண்களுக்கே பராமரிப்பு சுமை அதிகமாகிறது.
7) பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் பலர் சரியான கவனிப்பின்றி தனிமைப்படுத்தப்படுகின்றனர். இதனால் பக்கவாதத்திலிருந்து பெண்கள் குணமடைவது ஆண்களை காட்டிலும் குறைவாக உள்ளது.
8) பக்கவாதத்தின் விழிப்புணர்வு பெண்களுக்கு அதிகம் இருப்பினும் அவர்கள் பக்கவாதத்தால் பாதிக்கப்படும் போது மருத்துவமனைக்கு செல்வதில் தாமாதப்படுத்துகின்றனர்.

பக்கவாதம் ஒரு அவசர சிகிச்சை எடுக்கபட வேண்டிய நோய். எனவே பக்கவாதத்தை கண்டறியும் பக்கவாதத்தின் அறிகுறிகளையும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பக்கவாதத்தின் அறிகுறிகளை கண்டறியப்பட்ட உடனே பாதிக்கப்பட்டவரை மூன்று மணி நேரத்திற்குள் சிகிச்சை அளித்தால் மேலும் மூளை சேதத்தை குறைக்களாம்.

பி எஸ் ஜி மருத்துவமனையில் இயன்முறை மற்றும் புணர்வாழ்வு மருத்துவதுறையினர் பக்கவாத மறுவாழ்வு சிகிச்சை மையத்தை தொடங்கி உள்ளனர். இந்த மையத்தில் அளிக்கப்படும் சிறப்பு சிகிச்சைகள்:

| | | |
|---|---|---|
| 1) Robotic Hand Therapy | - | கையில் குறைபாடுகளை சரிபடுத்த |
| 2) Functional Electrical Stimulation | - | தசையின் செயல்பாட்டை அதிகபடுத்தி<br>அன்றாட வேலைகளை ஊக்குவித்தல் |
| 3) Body Weight Support Treadmill Training | - | நடைமுறைபாடுகளை சரிபடுத்த |
| 4) Balance System SD | – | உடல் சமநிலையை சரிபடுத்த |
| 5) Motomed Movement Therapy | – | கை மற்றும் கால்களுக்கு பயிற்சி அளிக்க |
| 6) EMG Biofeed Back | - | மூளை மறுபயிற்சியை ஊக்குவித்து<br>தன்னிச்சையான உடல் இயக்கத்தை அதிகபடுத்த |

Robotic Hand Thearapy என்ற சிகிச்சை கருவி தமிழ்நாட்டில் முதன்முறையாக பி எஸ் ஜி மருத்துவமனையில் தொடங்கப்பட்டுள்ளது. தென் இந்தியாவில் Robotic Hand Thearapy என்ற கருவியை கொண்ட இரண்டாவது மருத்துவமனையாகும்.